**உதவி அமர்வு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 29–ஆம் நாள் புதன் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 13–ஆம் நாள்)**

**அமர்வு வழக்கு எண்.55/2020**
(CNR.No. TNTS07-000483-2020)
* * * * * * *

(சங்கரன்கோவில், நீதித்துறை நடுவர் நீதிமன்ற முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.36/2019, அந்நீதித்துறை நடுவரால் மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது)

குருவிகுளம் காவல்நிலையக் குற்ற எண்.92/2019

**குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர்கள் மற்றும் விலாசங்கள்:**

1. ராஜ் என்கிற அந்தோணிராஜ்
   வயது 34/19
   த/பெ வெள்ளைச்சாமி
   காந்திநகர் 3 வது தெரு,
   சங்கரன்கோவில்

2. வேல்முருகன் வயது 35/19
   த/பெ முத்துச்சாமி
   இந்திரா காலனி, மலையான்குளம்

**குற்றமும் குற்றச்சாட்டுக்களின் விபரங்களும்:**

| | | |
|---|---|---|
| 1 வது குற்றச்சாட்டு | : | இ.த.ச., 341 பிரிவின் படி தண்டிக்கத்தக்கதான, சட்டவிரோதமாக வழிமறித்தல் என்னும் குற்றம் |
| 2 வது குற்றச்சாட்டு | : | இ.த.ச., 307 பிரிவின்படி தண்டிக்கத்தக்கதான, கொலை முயற்சி செய்தல் என்னும் குற்றம் |

| | | |
|---|---|---|
| 3 வது குற்றச்சாட்டு | : | இ.த.ச., 506(2) பிரிவின்படி தண்டிக்கத்தக்கதான, குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தல் என்னும் குற்றம் |

**எதிரிகளின் வாதுரை:**

| | | |
|---|---|---|
| 1 வது குற்றச்சாட்டு | : | 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 2 வது குற்றச்சாட்டு | : | 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 3 வது குற்றச்சாட்டு | : | 1 வது எதிரி குற்றவாளி இல்லை |

**நீதிபதியின் தீர்மானம்:**

1 வது எதிரி இதச 341 307, 506(2) பிரிவின்கீழும் குற்றவாளி அல்லர். 2 வது எதிரி இதச 341, 307 பிரிவின் கீழும் குற்றவாளி அல்லர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்ப்பு:**

1 வது எதிரி இதச 341 307, 506(2) பிரிவின்கீழும், 2 வது எதிரி இதச 341, 307 பிரிவின் கீழும் குற்றவாளிகள் அல்லர் என முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச., 235(1) பிரிவின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் பிறப்பித்துக் கொடுத்த பிணைமுறிகள் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் தானாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திருவாளர்.பி. பேச்சிமுத்து |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திருவாளர். M.வேல்ராஜ் |

## தீ ர் ப் பு ரை

கடந்த 04.04.2019 ஆம் தேதியன்று இரவு 21.00 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 முத்துப்பாண்டி என்பவர் மலையான்குளம் ஜெயபாரத் மில்லில் வாட்ச்மேன் வேலையை முடித்துவிட்டு அவரது ஊரான

மீன்துள்ளி செல்லவேண்டி மலையான்குளம் – சிதம்பராபுரம் ரோட்டில் உள்ள கல்மண்டபம் அருகே அவரது இருசக்கர வாகனத்தில் போய்க் கொண்டிருக்கும்போது, 1வது எதிரியும் அவருடைய நண்பர் 2வது எதிரியும் 1வது எதிரிக்கு சொந்தமான பதிவு எண் எழுதப்படாத பஜாஜ் சி.டி 100 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து புகார்தாரரான அ.சா.1யை வழிமறித்து கீழே தள்ளிவிட்டு 2வது எதிரி அ.சா.1ன் கால்களை அமுக்கி பிடித்தும், 1வது எதிரி அ.சா.1ன் கைகளை பிடித்துக்கொண்டு கட்டாயப்படுத்தி 1வது எதிரி கொண்டு வந்த Malic Insecticide என்று எழுதப்பட்ட பூச்சி கொல்லி மருந்தை கட்டாயப்படுத்தி அ.சா.1ன் வாயில் ஊற்றி கொலை செய்ய முயற்சி செய்தும், பின்பு 1வது எதிரி அ.சா.1 ஐ பார்த்து, அ.சா.1ன் மனைவியிடமும் எந்த பிரச்சனையும் வைக்கக்கூடாது என்று சொல்லியும் பூச்சி மருந்தை தானாகத்தான் குடித்ததாக மருத்துவமனையில் சொன்னால் உன்னை காப்பாற்றுவேன் இல்லை என்றால் மருத்துவமனைக்கு கூட்டி செல்ல மாட்டேன் என மிரட்டியுள்ளார். எனவே, 1வது எதிரி இ.த.ச., 341, 307, 506(i) பிரிவுகளின் படியும், 2வது எதிரி இதச., 341, 307, பிரிவுகளின் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக, எதிரிகள் மீது குருவிகுளம் காவல்நிலைய ஆய்வாளரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில், இவ்வழக்கின் எதிரிகள் மீது முதலில் சங்கரன்கோவில், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.36/2019 என வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டு, அங்கு மேற்படி எதிரிகள் முன்னிலையானதும், வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச., 207 பிரிவின்கீழ் இலவசமாய் வழங்கப்பட்டுள்ளன. எதிரிகள் மீதான இ.த.ச., 307 பிரிவின் கீழான குற்றமானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், பின்னர் அந்நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கை மாண்புமிகு திருநெல்வேலி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் விசாரணைக்காக கு.வி.மு.ச., 209 பிரிவின் கீழ் பணிந்து சமர்ப்பித்துள்ளது. மேற்படி அமர்வு

நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன், எதிரிகள் மீதான வழக்கு, அமர்வு வழக்கு எண்.55/2020 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, அதன்பின் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கிற்காக இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையான நிலையில், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலித்துப் பார்க்கப்பட்டும், அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்கை மேல்நடத்த போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியமையால், 1 வது எதிரிக்கு எதிராக இதச 341, 307, 506(2) பிரிவின்கீழும், 2 வது எதிரிக்கு எதிராக இதச 341, 307 பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு வாசித்துக்காட்டி, விளக்கி வினவப்பட்டபோது, எதிரிகள் தங்கள் குற்றவாளிகள் இல்லை என எனக் கூறி தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு விசாரணைக்கு வகை செய்யப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பில் மொத்தம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் 2 வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு, அவைகள் சான்றுப் பொருட்கள்–1 மற்றும் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து புலனாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:

புகார்தாரரான அ.சா.1 முத்துப்பாண்டி கீழநீலிதநல்லூர் கிராமத்தில் குடியிருந்து செக்யூரிட்டியாக வேலை செய்து வந்தார். அ.சா.1 க்கு திருமணமாகி வெள்ளத்தாய் என்ற மனைவியும், இரு குழந்தைகளும் உள்ளனர். அ.சா.1 க்கும் அவரது மனைவி வெள்ளத்தாயிக்கும் திருமணம் ஆகி 12 வருடங்கள் ஆகிறது. திருமணத்திற்கு முன்பு அ.சா.1 ன் மனைவி வெள்ளத்தாய்க்கும், 1 ஆம் எதிரிக்கும் தொடர்பு இருந்தது. மேற்படி 1 ஆம்

எதிரிக்கும், அ.சா.1ன் மனைவிக்கும் உள்ள தொடர்பு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 3 1/2 வருடங்களாக பிரிந்து இருந்தார்கள். இது சம்மந்தமாக அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனு கொடுத்து விசாரித்து அனுப்பிவிட்டார்கள். சம்பவ தினத்தன்று அ.சா.1 மலையான்குளம் மில்லில் செக்யூரிட்டி வேலை முடித்துவிட்டு 04.04.2019 ஆம் தேதியன்று இரவு 7.00 மணிக்கு மாலையாங்குளம் –சிதம்பராபுரம் செல்லும் வழியில் கல்மண்டபத்தின் அருகில் சென்றபோது, 1வது எதிரியும், 2வது எதிரியும் வழிமறித்தனர். அப்போது அ.சா.1 எதற்காக தன்னை வழிமறிக்கிறீர்கள் என்று கேட்டபோது, உன் பொண்டாட்டியுடன் நீயும் வாழ மாட்டாய் என்னையும் வாழவிடமாட்டாய் என்று 1வது எதிரி சொல்லி 1வது எதிரி அ.சா.1யை கீழே தள்ளிவிட்டு, நெஞ்சில் மிதித்தும், 2வது எதிரி, அ.சா.1ன் கையை பிடித்து கொள்ள 1வது எதிரி, அ.சா.1ஐ பார்த்து, ஏலே தேவிடியா மகனே உன்னை இன்றோடு தொலைத்து கட்டவேண்டும் என்று கூறிக்கொண்டே மருந்தை அ.சா.1ன் வாயில் ஊற்றினார். அதை அ.சா.1 தட்டிவிட்டதில் மேற்படி மருந்து அ.சா.1ன் கை, முகத்தில் சிதறியதாகவும், பின்பு அ.சா.1 வாயெல்லாம், கண்ணெல்லாம் எரியுது என்று சொல்லி தன்னை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்தினார். அப்பொழுது 1ம் எதிரி நீயாக தான் மருந்தை குடித்தேன் என்று சொன்னால் தான் காப்பாற்றுவேன் என்று சொன்னதின் பேரில் அ.சா.1 தன் உயிரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சரி என்று கூறினார். பின்பு எதிரிகள் அ.சா.1யை பைக்கில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள்.

4.2. கடந்த 04.04.2019 ஆம் தேதியன்று இரவு 11.55 மணியளவில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அ.சா.7 மருத்துவர் அன்னராஜ் என்பவர் பணியில் இருந்தபோது அ.சா.1யை அவரது நண்பர் ராஜா மேற்படி மருத்துவமனைக்கு அழைத்து வந்தபோது அன்றைய தினம் இரவு சுமார் 9.00 மணியளவில் மீன்துள்ளி ஊரில் மேற்கு பகுதியில் வைத்து அ.சா.1 பூச்சி கொல்லி மருந்து அருந்தியதாக மருத்துவரிடம் கூறினார். பின்பு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அ.சா.1

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது, மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை குருவிகுளம் காவல்நிலைய தலைமை காவலர் அ.சா.4 செந்தில்குமார் பெற்று மேற்படி மருத்துவமனைக்கு 05.04.2019 அன்று காலை 9.00 மணியளவில் சென்று அ.சா.1 னிடம் புகார்வாக்குமூலம் பெற்று அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆய்யவாளர் பார்வைக்கு வழக்கு கோப்புகளை சமர்பித்துள்ளார்.

4.3. அ.சா.8 காவல் ஆய்வாளர் திரு.கண்ணன் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.04.2019 ஆம் தேதியன்று சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.5, ராஜேந்திரன், அ.சா.6 சௌந்தரராஜ் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.8, பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.9 மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்னர் காயம்பட்ட நபரும், புகார்தாரருமான அ.சா.1 முத்துப்பாண்டி மற்றும் சாட்சிகள் அ.சா.2 பாலசுப்பிரமணியன், சாட்சி.3 பெருமாள், சாட்சி.6, முருகேசன், சாட்சி.7 முருகேசன், அ.சா.5, ராஜேந்திரன், அ.சா.6 சௌந்தரராஜ், அ.சா.4 தலைமை காவலர் செந்தில்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அ.சா.8 க்கு கிடைத்த தகவலின்படி அன்றைய தினம் மாலை 15.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் இருவரையும் மலையான்குளம் ஜெய்பாரத் மில் கேட் அருகே வைத்து கைது செய்தபோது மேற்படி எதிரிகள் சாட்சிகள் சாட்சி.6, முருகேசன், சாட்சி.7 முருகேசன் ஆகியோர்கள் முன்பு சம்பவம் குறித்து எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானா முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆகும். பின்பு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு சம்பவத்திற்கு பயன்படுத்திய சா.பொ.1, சுமார் 250 மில்லி பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டில், மாலிக் Insecticide என்று எழுதப்பட்ட பூச்சு மருந்து வாடையுடன் கூடிய பாட்டில் ஒன்று மற்றும் சா.பொ.2 பதிவெண் எழுதப்படாத பஜாஜ் சிடி 100 புளூ கலர் மோட்டார் சைக்கிள்

ஒன்று ஆகியவற்றை அ.சா.ஆ.11 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். பின்பு எதிரி மற்றும் சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து காவல் அடைப்பு அறிக்கை தயார் செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்பு 10.05.2019 ஆம் தேதியன்று மேற்படி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7, அன்னராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச., 341, 307, 506(1) பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

5. விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளை பாதிக்கின்ற அம்சங்கள் குறித்து விளக்குவதற்காக, எதிரிகளிடம், கு.வி.மு.ச., 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்து, பொய் சாட்சியம் எனத் தெரிவித்தனர். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினர். ஆனால் போதுமான கால அவகாசம் வழங்கியும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் முன்னிறுத்தப்படாததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்,**

> "எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? ஆமெனில், எதிரிகளுக்கு விதிக்கப்படவேண்டிய தண்டனை என்ன?"

என்பதேயாகும்.

7. அரசு தரப்பில், மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்களின் வாயிலாக அரசு தரப்பில் மொத்தம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் 2 வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு, அவைகள் சான்றுப் பொருட்கள்–1 மற்றும் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில், சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8. அரசு தரப்பில், காயம்பட்ட சாட்சியான அ.சா.1 சம்பவம் குறித்தும், சம்பவத்தில் எதிரிகளின் பங்கு பற்றியும் தெளிவாக சாட்சியமளித்துள்ளதாலும், அ.சா.2, எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தது குறித்து தனது சாட்சியத்தின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளதாலும், மேலும், அ.சா.4 ஆல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதில் எந்தவித காலதாமதமும் கிடையாது என்பதாலும், மேலும், அ.சா.8 விசாரணை அதிகாரி முறையாக சாட்சிய விசாரணை மேற்கொண்டு, சான்றுப் பொருட்களை கைப்பற்றியுள்ளதாலும், எதிரிகளுக்கு எதிரான குற்றமானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகள் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

9. எதிரிகள் தரப்பில், அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 ன் சாட்சியம் நம்பத்தக்க சாட்சியம் அல்ல என்றும், அ.சா.1 அவரது மனைவி மீதான சந்தேகத்தின் காரணமாக பூச்சி மருந்தை குடித்துவிட்டு, அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றும், அ.சா.1 மருத்துவரிடம் தானாகவே பூச்சி மருந்தை குடித்ததாக கூறிவிட்டு அதற்கு முரணாக புகார் வாக்குமூலத்தில் 1 வது எதிரி அ.சா.1 க்கு பூச்சி மருந்தை வாயில் ஊத்திவிட்டார் என்று புகார் வாக்குமூலம் அளித்துள்ளதால் மேற்படி புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றும், மேலும், சம்பவமானது தனிப்பட்ட சாட்சிகளின் மூலம் உறுதிபடுத்தப்படவில்லை என்றும், மேலும், எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள்

கைப்பற்றப்பட்டது என்பது அத்தாட்சி சாட்சிகளால் உறுதிபடுத்தப்படவில்லை என்றும், எனவே, அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகள் விடுதலை செய்யப்பட–வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

10. <u>**பிரச்சினைக்கான தீர்வு**</u>:

(i) 1 வது, 2 வது எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 341–ன் கீழான குற்றத்தை பொறுத்து, 04.04.2019 ஆம் தேதி 19.00 மணிக்கு மலையான்குளம் – சிதம்பராபுரம் சாலையில் உள்ள கல்மண்டபம் முன்பு வைத்து எத்திசையிலும் செல்ல உரிமை படைத்த புகார்தாரரான அ.சா.1 அவர் செல்லும் திசையில் செல்லவிடாமல் எதிரிகள் இருவரும் 1 வது எதிரிக்கு சொந்தமான பஜாஜ் சிடி 100 நம்பர் இல்லாத புளூ கலர் பைக்கில் வந்து தடுத்து வழிமறித்தனர் என்பதும்,

(ii) 1 வது, 2 வது எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307 ன் கீழான குற்றத்தை பொறுத்து, எதிரிகள் இருவரும் புகார்தாரரான அ.சா.1 யை கொலை செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் 1 வது எதிரி அ.சா.1 யை பார்த்து உன் பொண்டாட்டி வெள்ளைத்தாய்தான் அனுப்புச்சு வச்சா, நீ அவ கூட திரும்பவும் பிரச்சனை பண்றேனு, நீயும் அவளோட வாழமாட்டேங்கற என்னையும் வாழவிடமாட்டேங்கிற, அதாண்டா இன்னைக்கு ஒரு முடிவோட வந்தோம், நீ உயிரோட இருந்தா தானே பிரச்சனை எனச் சொல்லி எதிரிகள் இருவரும் அ.சா.1 யை கீழே தள்ளி, 2 வது எதிரி அ.சா.1 ன் காலை பிடித்துக்கொண்டும், 1 வது எதிரி அ.சா.1 ன் கைகளை பிடித்துக்கொண்டு நெஞ்சோடு அழுத்தி தேவடியாபயலே இத்தோடு செத்து தொலை என்று சொல்லி கையில் இருந்த பூச்சி மருந்தை கட்டாயப்படுத்தி அ.சா.1 ன் வாயில் ஊற்றியதாகவும், அ.சா.1 போராடி தட்டிவிட மேற்படி மருந்து கண், முகம் ஆகியவைகளில் சிதறியதாகவும், அவ்வாறு எதிரிகள் இருவரும் அ.சா.1 க்கு கொடுத்த பூச்சி மருந்தின்

வீரியத்தால் மேற்படி சாட்சி இறந்திருப்பாரேயானால் அ.சா.1 மரணித்திருப்பார் என்றும், அதனால் எதிரிகள் கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார்கள் என்று தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்துள்ளனர் என்பதும்,

(iii) 1 வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 506(2)–ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1 வது எதிரி, அ.சா.1 யை பார்த்து இந்த விசயத்த வெளியே சொன்னா கொன்றுவேன் என்று உயிர்பயம் ஏற்படும்படி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தனர் என்பதும், அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

11. இந்த வழக்கில் அ.சா.1 முத்துப்பாண்டி புகார்தாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 பாலசுப்பிரமணியன் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 முருகேசன், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 செந்தில்குமார், தலைமை காவலர், அ.சா.1–னிடம் புகார்வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 ராஜேந்திரன் மற்றும் அ.சா.6 சௌந்தரராஜ் பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.7, அன்னராஜ் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவ சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இறுதியாக, அரசு தரப்பில், இவ்வழக்கை விசாரித்து, குற்ற அறிக்கை தாக்கல் செய்தது பற்றி விசாரணை அதிகாரி சாட்சியாக அ.சா.8 கண்ணன், ஆய்வாளர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட, அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.1 க்கும் அவரது மனைவி வெள்ளத்தாய்க்கும் 12 வருடங்களுக்கு முன்பாக திருமணமாகியிருந்தது என்றும், திருமணத்திற்கு முன்பு 1 வது எதிரிக்கும்,

அ.சா.1ன் மனைவிக்கும் தொடர்பு இருந்தது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அ.சா.1 அவரது மனைவியை கடந்த 3 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 04.04.2019 ஆம் தேதியன்று இரவு 7.00 மணியளவில் அ.சா.1 வேலை முடித்துவிட்டு மலையாங்குளம் – சிதம்பராபுரம் செல்லும் வழியில் கல்மண்டபத்தின் அருகில் வந்துகொண்டிருந்தபோது 1வது எதிரியும், 2வது எதிரியும் அ.சா.1யை வழிமறித்து, உன் மனைவியுடன் நீயும் வாழமாட்டாய், என்னையும் வாழவிடமாட்டாய் என்று 1வது எதிரி கூறி கீழே தள்ளிவிட்டு 1வது எதிரி அ.சா.1ன் நெஞ்சில் மிதித்து, 2வது எதிரி வேல்முருகன் அ.சா.1ன் கையை பிடித்துக்கொள்ள 1வது எதிரி அ.சா.1யை இன்றோடு தொலைத்து கட்டவேண்டும் என்று கூறிக்கொண்டு மருந்தை வாயில் ஊற்றினார் என்றும், அப்போது அ.சா.1 தன்னை காப்பாற்றுமாறு கத்தியபோது 1வது எதிரி, அ.சா.1யை பார்த்து தானாகத்தான் மருந்தை குடித்ததாக சொன்னால் காப்பாற்றுவோம் என்று சொன்னபோது அ.சா.1 சரி என்று சொன்னதாகவும், அதன் பின்னர் எதிரிகள் அ.சா.1யை பைக்கில் வைத்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், மேலும் எதிரிகள் மிரட்டியதன் காரணமாக மருத்துவமனையில் அ.சா.1 தானாக மருந்து குடித்ததாக சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேற்படி அரசுதரப்பு வழக்கில் அ.சா.1ன் சாட்சியத்தை தவிர வேறு சாட்சிகள் யாரும் சம்பவத்தை பார்த்த கண்ணுற்ற சாட்சிகள் கிடையாது. எனவே அ.சா.1 எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை பொறுத்து நம்பத்தகுந்த வகையில் சாட்சியம் அளித்துள்ளாரா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள், அ.சா.1யை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு அ.சா.1ன் வாயில் 1வது எதிரி பூச்சிகொல்லி மருந்தை ஊற்றியதாக கூறியுள்ள நிலையில், அவர்களே மீண்டும் அ.சா.1யை காப்பாற்றுவதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் எதிரிகள் அ.சா.1யை கொலை செய்யும் நோக்கில் பூச்சி கொல்லி மருந்தை அ.சா.1ன் வாயில் ஊற்றியிருந்தால் எதிரிகள்,

அ.சா.1 யை காப்பாற்ற முயற்சித்திருக்க மாட்டார்கள். எனவே எதிரிகள் அ.சா.1 யை கொலை செய்யும் நோக்கில் வாயில் பூச்சி கொல்லி மருந்தை ஊற்றினார்கள் என்று அ.சா.1 அளித்துள்ள சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. அடுத்ததாக, அ.சா.ஆ.7, விபத்து பதிவேடை பரிசீலனை செய்கையில், அ.சா.1 சிகிச்சைக்கு சென்றபோது தானாக மருந்து குடித்ததாகவே அ.சா.7 மருத்துவரிடம் கூறியுள்ளார். ஆனால் அதற்கு முரணாக மறுநாள் 05.04.2019 ஆம் தேதியன்று அளித்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் அ.சா.1 யை கொலை செய்யும் நோக்குடன் வாயில் பூச்சி கொல்லி மருந்தை ஊற்றினார்கள் என்று அளித்துள்ள புகார் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ளது. மேலும் அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும் சந்தேகத்திற்குரியதாக உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. மேலும் அரசு தரப்பில் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.8 விசாரணை அதிகாரியானவர் சாட்சி அ.சா.3 முன்னிலையில் வழக்கு சொத்துக்களான சா.பொ.1, பூச்சிகொல்லி மருந்து பாட்டில் ஒன்று மற்றும் சா.பொ.2, பதிவு எண் எழுதப்படாத பஜாஜ் CD 100 என்ற இருசக்கர வாகனத்தையும், அ.சா.ஆ.11, அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களான சா.பொ.1 மற்றும் சா.பொ.2 கைப்பற்றப்பட்டது என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

16. மேலும் அரசு தரப்பில் அ.சா.1 ன் சாட்சியம் நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை என்பதாலும், புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல்

அறிக்கை சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்பதாலும், எதிரிகள் தரப்பில் ஏற்கனவே 1வது எதிரிக்கும், அ.சா.1க்கும் இருந்த முன் பகையின் காரணமாக அ.சா.1 தானாகவே மருந்தை குடித்துக்கொண்டு எதிரிகளின் மீது உள்ள விரோதத்தின் காரணமாக அ.சா.1, எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகள் அ.சா.1யை கொலை செய்யும் நோக்கத்துடன் பூச்சி கொல்லி மருந்தை அ.சா.1ன் வாயில் ஊற்றினார்கள் என்று சாட்சியமளித்துள்ளதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதாக உள்ளது.

17. எனவே 1வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341, 307, 506(2) மற்றும் 2வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341, 307 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டை பொருத்து பரிசீலனை செய்கையில், அ.சா.1ன் சாட்சியம் நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை என்பதாலும், புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்பதாலும், வழக்கு சொத்துக்களான சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், 1வது, 2வது எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 341–ன் கீழான குற்றத்தை பொறுத்து, 04.04.2019 ஆம் தேதி 19.00 மணிக்கு மலையான்குளம் – சிதம்பராபுரம் சாலையில் உள்ள கல்மண்டபம் முன்பு வைத்து எத்திசையிலும் செல்ல உரிமை படைத்த அ.சா.1யை அவர் செல்லும் திசையில் செல்லவிடாமல் எதிரிகள் இருவரும் 1வது எதிரிக்கு சொந்தமான பஜாஜ் சிடி 100 நம்பர் இல்லாத புளூ கலர் பைக்கில் வந்து தடுத்து வழிமறித்தனர் என்பதும், 1வது, 2வது எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307ன் கீழான குற்றத்தை பொறுத்து, எதிரிகள் இருவரும் மேற்படி அ.சா.1யை கொலை செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் 1வது எதிரி மேற்படி அ.சா.1யை பார்த்து உன் பொண்டாட்டி வெள்ளைத்தாய்தான் அனுப்புச்சு வச்சா, நீ அவ கூட திரும்பவும் பிரச்சனை பண்றேனு, நீயும் அவளோட வாழமாட்டேங்கற என்னையும் வாழவிடமாட்டேங்கிற, அதாண்டா இன்னைக்கு ஒரு முடிவோட வந்தோன், நீ உயிரோட இருந்தா தானே பிரச்சனை எனச் சொல்லி எதிரிகள் இருவரும் மேற்படி அ.சா.1யை கீழே தள்ளி, 2வது எதிரி மேற்படி அ.சா.1ன் காலை பிடித்துக்கொண்டும், 1வது எதிரி

மேற்படி அ.சா.1ன் கைகளை பிடித்துக்கொண்டு நெஞ்சோடு அழுத்தி தேவடியாபயலே இத்தோடு செத்து தொலை என்று சொல்லி கையில் இருந்த பூச்சி மருந்தை கட்டாயப்படுத்தி மேற்படி அ.சா.1ன் வாயில் ஊற்றியதாகவும், மேற்படி அ.சா.1 போராடி தட்டிவிட மேற்படி மருந்து மேற்படி அ.சா.1ன் கண், முகம் ஆகியவைகளில் சிதறியதாகவும், அவ்வாறு எதிரிகள் இருவரும் மேற்படி அ.சா.1க்கு கொடுத்த பூச்சி மருந்தின் வீரியத்தால் மேற்படி அ.சா.1 இறந்திருப்பாரேயானால் மேற்படி அ.சா.1 மரணித்திருப்பார் என்றும், அதனால் எதிரிகள் கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார்கள் என்று தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்துள்ளனர் என்பதும், 1வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 506(2)–ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1வது எதிரி மேற்படி அ.சா.1யை பார்த்து இந்த விசயத்த வெளியே சொன்னா கொன்றுவேன் என்று உயிர்பயம் ஏற்படும்படி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தனர் என்பதும், அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. எனவே, மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, அரசு தரப்பில் முன்னிடப்பட்டிருக்கும் சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்களின் வாயிலாக, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு தெள்ளத் தெளிவாக நிரூபணம் செய்ய அரசு தரப்பு தவறியுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில், 1வது எதிரிக்கு எதிரான இதச 341, 307, 506(2) பிரிவுகளின் கீழான குற்றங்களை பொறுத்தும், 2வது எதிரிக்கு எதிரான இதச 341, 307 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றங்களை பொறுத்தும் 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்லர் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது .

19. இறுதியாக, 1வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341, 307, 506(2) மற்றும் 2வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341, 307 இன் கீழான குற்றத்தை பொருத்தும் குற்றவாளிகள் அல்லர் என முடிவு செய்து, எதிரிகளை

கு.வி.மு.ச., 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் பிறப்பித்துக் கொடுத்த பிணைமுறிகள் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் தானாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு, இந்நீதிமன்ற வழக்குச் சொத்து எண்.14/2023–ல் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 250 எம்.எல் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் Malik Insecticite என்று எழுதப்பட்ட பூச்சி மருந்து வாடையுடன் கூடிய பாட்டில் ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் வழக்கு சொத்து எண்.14/2023 ல் வரிசை எண்.2 ல் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பஜாஜ் சிடி 100 புளூ கலர் மோட்டார் பைக் ஒன்று காவல்நிலைய பொறுப்பில் உள்ளதால் மேற்படி வாகனத்தினை அதன் உரிமையாளர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் தக்க மனுவின்பேரில் பெற்ற செல்ல உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 29–ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.07.29 20:26:34 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. முத்துப்பாண்டி |
| அ.சா.2 | திரு. பாலசுப்பிரமணியன் |
| அ.சா.3 | திரு. முருகேசன் |
| அ.சா.4 | திரு. செந்தில்குமார் |
| அ.சா.5 | திரு. ராஜேந்திரன் |
| அ.சா.6 | திரு. சௌந்தர்ராஜ் |

அ.சா.7 திரு. அன்னராஜ் மருத்துவர்

அ.சா.8 திரு. கண்ணன்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | --- | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | --- | ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வதாக உள்ள அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | --- | அத்தாட்சியில் 1 வதாக உள்ள அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | --- | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | --- | பார்வை மகஜரில் 1 வதாக உள்ள அ.சா.5 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | --- | பார்வை மகஜரில் 2 வதாக உள்ள அ.சா.6 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | --- | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | --- | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | --- | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.10 | --- | எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.11 | --- | அத்தாட்சி |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u>:**

சா.பொ.1 சுமார் 250 எம்.எல் பிடிக்கக்கூடிய மாலிக் Insecticide என்று எழுதப்பட்ட பூச்சி மருந்து வாடையுடன் கூடிய பாட்டில் ஒன்று

சா.பொ.2 பதிவு எண் எழுதப்படாத பஜாஜ் சிடி 100 புளூ கலர் மோட்டார் பைக் ஒன்று

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :இல்லை</u>**

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.07.29 20:26:42 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**உதவி அமர்வு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அமர்வு வழக்கு எண்.55/2020**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 29.07.2026**